III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.40/2017

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 05 -02-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடலட்சுமி ராஜ்யம் | Village | : |
| Father's Name | : பாலகிருஷ்ணா | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதி மற்றும் 5 வது பிரதிவாதியின் தாயார். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.மேலும் எனது தரப்பில் 8 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது கணவரின் வாரிசுரிமை சான்றிதழின் நகல். (அது பி.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கடையின் Service connection No.03901319 க்குறிய மின்சார இணைப்பு எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டதற்கான கடிதத்தின் நகல். (அது பி.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கடையின் Service connection No.03901318 க்குறிய மின்சார இணைப்பு எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டதற்கான கடிததின்

நகல். (அது பி.த.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது வீட்டிற்குரிய மின்சார இணைப்பு (Service connection No.03901322) எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டதற்கான கடிதத்தின் நகல் (அது பி.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது மற்றும் 5ம் பிரதிவாதி பெயரிலுள்ள சொத்துவரி அட்டையின் நகல். (அது பி.த.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது மற்றும் 5ம் பிரதிவாதி பெயரிலுள்ள சொத்துவரி ரசீது. (அது பி.த.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). வரிசைஎண்கள். 0720089, 0720917 மற்றும் 0720815 ஆகியவற்றிற்க்கான எனது மாமியார் பெயரிலுள்ள சொத்துவரி அட்டைகளின் நகல். (அது பி.த.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). 19.04.1991 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம். (அது பி.த.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

(பிரதிவாதிகள் 1 மற்றும் 5 தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)